**IN THE COURT OF SPECIAL SUBORDINATE JUDGE (LAOP), ARAKKONAM.**

**OS. 121/2019**

**Deposition of Witness : PW-1**

**பெயர் : ஜெயந்தி**

**தந்தை பெயர் : தசரதன்**

**Solemnly affirmed in accordance with the provisions of Section 6 of the Oaths Act, 1969 on 10.10.2023.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**வா.சா.ஆ.9-ல் 2018 ஆண்டு வரை என் தந்தை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக ஆவணம் தாக்கல் செய்துளேன் என்றால், ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். 2017-ஆம் ஆண்டு வரை சிகிச்சையில் இருந்தார். வா.சா.ஆ.8-ல் 07.06.2018 வரை மருந்துகள் வாங்கியதற்கான குறிப்புகள் உள்ளது என்றால் சரிதான். என் தந்தை 1983-ஆம் ஆண்டிலிருந்து 2018 வரை ஒரே மாத்திரைதான் வாங்கி கொடுத்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.8-ல் சொல்லப்பட்டுள்ள மாத்திரைகள் தான் வாங்கிக்கொடுத்தேன். வா.சா.ஆ.5-ல் 1975-ல் ஆர்.கே.தசரதன் மற்றும் ஆர்.கே. மோகன் இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டதாக பத்திரம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆர்.கே. மோகன் என்னுடைய பெயரிப்பா, மேற்படி ஆவணத்தில் ஆர்.கே. மோகன் என்கிற ருக்மாந்தகன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், ஆர்.கே.தசரதன் என்கிற தட்சணாமூர்த்தி என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். என் தந்தை என் பெயரில் உயில் எழுதிவைத்தார் என்று சொல்லியுள்ளேன் அதில் ஆர்.கே. தசரசன் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆர்.கே.தசரதன் என்கிற தட்சணாமூர்த்தி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.**

வா.சா.ஆ.11–ல் ஆவணத்தில் ஆர்.கே.தசரதன் என்று தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. ஆனால் தட்சணாமூர்த்தி என்ற பெயர் கையால் எழுதப்பட்டுள்ளது அதேபோல் சாட்சி கையெழுத்து போட்டவர்கள் அனைவரும் ஆர்.கே. தசரதன் என்று தான் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். என் தந்தைக்கு இரண்டு பெயர்கள் உள்ளதாக 2006–ல் வட்டாட்சியரிடம் சான்று வாங்கியுள்ளேன். அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, தேவைப்பட்டதால் தாக்கல் செய்கிறேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சர்வே எண்.82/2–ஐ 01–ம் பிரதிவாதியின் பெயரில் பட்டா உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி 01–ம் பிரதிவாதியின் பெயரில் பட்டா கொடுத்தற்கு, வட்டாட்சியரிடம் மேற்படி பட்டாவை இரத்து செய்ய சொல்லி மனு கொடுத்துள்ளேனா என்றால் எனக்கு நினைவில்லை. மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நினைவில்லை. தவறுதலாக பட்டா கொடுத்துள்ளார்கள் என்பதற்காக வட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியரை தரப்பினராக சேர்ந்துள்ளேன் என்றால், இல்லை. 1962–ல் முனியம்மாளிடமிருந்து என்னுடைய பாட்டி அங்கம்மாள் சர்வே எண். 13/1–ல் 37 1/2 X 122 சதுர அடிக்கு கிரையம் வாங்கினார். உயிலிலும் சர்வே எண்.13/1 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் வழக்கறிஞர் அறிவிப்பிலும் சர்வே எண்.13/1 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே முனுசாமி பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது தெரிந்த பிறகும் தாவா சொத்து சர்வே எண்.13/1 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வழக்கு தாக்கல் செய்த பிறகு பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையில் சர்வே எண்.82/2 பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், சர்வே எண்.13/1 இல்லை என்றும், சொல்லிய பிறகும் சர்வே எண்.82/2-ல் பட்டா வழங்கியது தவறு என்று சொல்லி நடடிவக்கை எடுத்துள்ளீர்களா என்றால் நினைவில்லை. தாவா சொத்து மேற்கு எல்லையானது கிராம நத்தம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிராம நத்தத்தில் தான் பிரதிவாதிக்கு பட்டா கொடுத்துள்ளார்கள் என்றும், அதில் 50 ஆண்டுகளாக அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. என் பாட்டியுடைய சொத்தில் தான் அனுபவித்து வருகிறார். வா.சொ.ஆ 14 02 சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளதுஎன்றல் சரிதான் 37 1/2 X 122 சதுர அடிக்கு தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2004-ல் முனுசாமிக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதா என்றால் கூட்டு பட்டா தான் வழங்கப்பட்டுள்ளது. இந்த விவரம் பிரதிவாதி சொல்லி தான் எனக்கு தெரியும். 2004-ல் பட்டா கொடுத்த பிறகு அவருடைய மனைவி பெயரில் 2005-ல் செட்டில் மெண்ட் எழுதிவைத்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். ஆனால் அதிக அளவிற்கு எழுதப்பட்டுள்ளது. செட்டில் மெண்ட் எழுதிவைத்த சொத்தில் தான் முனுசாமியும் அவருடைய மனைவியும் குடியிருக்கிறார் என்றால் சரிதான். அதனால் நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கும், முனுசாமி குடியிருந்து வரும் இடத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. என் பாட்டி அங்கம்மாள் இடத்தில் தான் குடியிருந்து வருகிறார்கள். ஏறக்குறைய 50 ஆண்டுகளாக முனுசாமி அவருடைய தந்தையார் தட்சணாமூரத்தி குடியிருந்து வந்தது தற்போது முனுசாமி குடியிருந்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு தான் எனக்கு தெரியும். 2004–ல் காலி மனையாக தான் இருந்தது. (21.04.1995–ல் ஆவண எண். 315/1995 அரக்கோணம் கூட்டுறவு வங்கியில் ஆர்.கே. தசரன் அடமான வைத்ததாக ஆவணம் உள்ளது என்றால் சரியல்ல. 19.03.2002–ல் ஆவண எண். 242/2002–ல் அரக்கோணம் கூட்டுறவு வங்கியில் ஆர்.கே. தசரன் மற்றொரு சொத்தை அடமான வைத்ததாக ஆவணம் உள்ளது சரியல்ல. 26.06.2006–ல் ஆவண் எண். 1028/2006, அரக்கோணம் கூட்டுறவு ஹர்பன் வங்கியில் சர்வே எண்.11, 12 க்கு கூட்டுறவு வங்கியல் அடமான வைத்துள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கேள்விகள் ஆட்சேபனையுடன் பதிவு செய்யப்பட்டது). அதனால் 1995–லிருந்து 2006 வரை பல ஆவணங்களை ஆர்.கே.தசரதன் பதிவு செய்துள்ளார் என்றும், ஆர்.கே.தசரதன் மற்றும் தட்சணாமூர்த்தி வேறு வேறு நபர்கள் என்று சொன்னால் சரியல்ல. ஆர்.கே.தசரதன் என்கிற தட்சணாமூர்த்தி தான் என்னுடைய தந்தை பெயர் ஆகும். ஆர்.கே.தசரன் மற்றும் தட்சாணமூர்திதி ஒரே நபராக இருந்தால் 1995–லிருந்து 2006 வரை வங்கியில் அடமானம் வைத்துள்ளார் நான் சொல்வது போல் மனநிலை பாதிக்கப்பட்வில்லை என்றால் சரியல்ல. 1983–லிருந்து 2017 வரை மனநிலை பாதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்தார் அதற்கான ஆவணங்கள் உள்ளது. 2017–ல் ஆர்.கே.தசரதன் மனநிலை சரியாகிவிட்டது உயில் எழுதிக்கொடுத்தது வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. ஆர்.கே.தசரதன் என்கிற தட்சணாமூர்த்தி உயில் ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது அதே போல் 1983–லிருந்து 2017 வரை ஆர்.கே.தசரதன் என்கிற தட்சணாமூர்த்தி

என்று குறிப்பிட்டு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 2006–ல் வட்டாட்சியரிடம் பெற்ற சான்றை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். உயில் ஆவணத்தை வைத்து தான் இறப்பு சான்று ஆர்.கே.தசரதன் என்கிற தட்சணாமூர்த்தி என்று சான்று வாங்கப்பட்டுள்ளது என்றால், அது மற்றும் வட்டாட்சியர் வழங்கிய சான்றை வைத்து இறப்பு சான்று வாங்கப்பட்டது. 2006–ல் வாங்கிய சான்றை வழக்கு தாக்கல் செய்து பிறகு ஏன் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், எனக்கு நினைவில்லை. சர்வே எண்.13/1 சொத்தானது ஆர்.கே.தசரதன் ஆர்.கே.மோகன் 2005–த்திற்கு முன்பே கிரையம் செய்து விட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண். 13/1–க்கும் பிரதிவாதிக்கும் சம்பந்தமில்லை என்றால் சொன்னால் சரிய்லல. மேற்படி சர்வே எண்ணில் தான் பிரதிவாதி குடியிருந்தது வருகிறார். சர்வே எண்.13/1–ல் 37 1/2 X 122 சர்வேயரை வைத்து அளந்து தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் சர்வேயர் வந்தார், பிரதிவாதி சண்டைப் போட்டதால் அளக்க முடியவில்லை. சர்வேயர் வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே தாவா சொ'த்தை அளக்க வந்தார். 37 1/2 X 122–யை சர்வேயரை வைத்து அளந்த நடவடிக்கை எடுத்துள்ளீர்களா என்றால் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். நான் சொல்வது பொய் என்றும், அவ்வாறு சர்வே எண் 13/1–ல் உள்ள இடம் எனக்கு சொந்தமான இடமாக இருந்திருந்தால் நீதிமன்ற ஆணையவரை நியமித்து நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. இனிமேலாவது நீதிமன்ற ஆணையரை வைத்து அளப்பதற்கு நடடிவக்கை எடுத்துள்ளீர்களா என்றால் வழக்கு முடிந்த பிறகு நாங்கள் அளந்து எடுத்துக்கொள்கிறோம்.

வழக்கு நிலுவையில் இருக்கும் போது அளப்பதற்கு தயாராக இல்லை என்று சொன்னால், அதை பற்றி எனக்கு தெரியாது. சர்வேயரை வைத்து அளக்கும் போது பிரதிவாதி தகராறு செய்தார் என்றும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளீர்களா என்றால் இல்லை. வருவாய் துறையில் படிக்கட்டிய ரசீது தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் எனக்கு நினைவில்லை. பிரதிவாதி பதிலுரையை தாக்கல் செய்த பிறகும் சர்வே எண்.13/1 என் பாட்டிக்கு சொந்தமானது என்று அதற்கு உண்டான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்பதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி அவருடைய தந்தையார் பெயரில் பட்டா வழங்கப்பட்டு 50 ஆண்டுகளாக பிரதிவாதியுடைய அனுபவத்தில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 2004–ல் வழங்கப்பட்ட பட்டாவின் அடிப்படையில் 01–ம் பிரதிவாதி 02–ம் பிரதிவாதிக்கு 2005–ல் செட்டில் மெண்ட் எழுதிவைத்தார் என்றும் இன்றையதேதி வரை ஆவணங்கள் அனைத்தும் 02–ம் பிரதிவாதி பெயரிதான் உள்ளது என்றால் அது தவறு. அதேபோல் சர்வே எண். 82/2 02–ம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய பாட்டி பெயரிலும் உள்ளது. இன்றைய தேதிவரை பிரதிவாதிகள் அனுபவித்தில் உள்ள சொத்தில் எந்த விதமான பரிகாரம் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை தாக்கல் செய்த பிறகு தான் வரி கட்டிவருகிறார்கள். வரி கட்டிவருவதற்கு 2018–ல் ஆட்சேபணை செய்துள்ளோம். ஆட்சேபணை செய்த விவரத்தை வழக்கிலோ முதன்மை சாட்சியத்திலோ சொல்லியுள்ளான என்றால் சொல்லியுள்ளேன். ஆட்சேபனை தெரிவித்தற்கு உண்டான ஆதாரத்தை தாக்கல் செய்துள்ளேன்.

தாவா சொத்தின் சர்வே எண்.13/1 என்றும், பிரதிவாதிகள் அனுபவித்து வரும் சொத்தின் சர்வே எண்.82/2 என்றும், அதனால் தாவா சொத்திற்கு பிரதிவாதி சொத்திற்கு எந்தவிதமன சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி அனுபவித்து வரும் சொத்து சர்வே எண்.13/1 ஆகும். சர்வே எண்.13/1 தான் என்னுடைய சொத்து அவ்வாறு வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி அனுபவிக்கும் சொத்தின் சர்வே எண்ணும் வழக்கு சொத்தின் சர்வே எண்ணும் வேறு என்றும், அதனால் எந்த பரிகாரமும் கேட்டமுடியாது என்றும், அதனால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.